**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 117** **நாள்:17.08.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கூவம் மற்றும் அடையாறு நதி கரையோரங்களில் தனியார் வசம் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு ரூ.210.18 கோடி மதிப்பில் நிரந்தர தடுப்பு வேலிகள், பூங்காக்கள், நடைபாதைகள் அமைத்தல் மற்றும் பாலங்கள் அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சென்னை நகரத்தில் 2015ம் ஆண்டு வரலாறு காணாத அளவுக்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட சென்னையை சுற்றியுள்ள நீர்நிலைகளை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கட்டடங்களும் காரணம் என்ற நீதிமன்ற ஆணைகளின்படி நீர்நிலைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை போர்க்கால அடிப்படையில் அகற்ற வேண்டும் என்பதில் பெருநகர சென்னை மாநகராட்சி உறுதியாக உள்ளது. அந்த அடிப்படையில் கூவம் மற்றும் அடையாறு நதி கரையோரங்களில் தனியார் வசம் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கூவம், அடையாறு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்வழிக்கால்வாய்களை மறுசீரமைப்பு செய்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காகவும், வெள்ளம் பாதிக்கும் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கும், நிலையில்லாத கட்டுமான குடியிருப்புகளில் இருக்கும் பொதுமக்களுக்கும் நாவலூர், திருவொற்றியூர், எழில்நகர், ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் அடையாறு நதியின் கரையோரம் 9,539 குடும்பங்கள் பாதிக்கப்பட்டனர் என கண்டறியப்பட்டு, 4,134 குடும்பங்கள் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT), ஒருங்கிணைந்த கூவம் நதி மறுசீரமைப்ப பணி (CRRT PROJECT) மேற்கொள்ளும் பொருட்டு, கூவம் நதியோரம் 14,257 குடும்பங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என கண்டறியப்பட்டு, 6,927 குடும்பங்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் நீர்வழிக்கால்வாய்கள் ஓரம் மொத்தம் 3,041 குடும்பங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என கண்டறியப்பட்டு, 1,671 குடும்பங்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர். விரிவாக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் வெள்ளத்தடுப்பு கட்டும் பணி மேற்கொள்ள நான்கு கால்வாய்களின் ஓரம் வசித்த 81 குடும்பங்கள்

ஆக்கிரமிப்பாளர்கள் என கண்டறியப்பட்டு, 81 குடும்பங்களும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கூவம் நதி, அடையாறு நதி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நீர்வழிக்கால்வாய்களில் 26,837 குடும்பங்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என கண்டறியப்பட்டு, இதுவரை 12,813 குடும்பங்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள ஆக்கிரமிப்பு குடியிருப்புகளை அகற்றி மறுகுடியமர்வு செய்ய தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் கூவம் ஆற்றில் தற்போது தெற்கு கூவம், மேற்கு கூவம் மற்றும் கிழக்கு கூவம் ஆகிய சாலையோரங்களில் 383 சிறு கடைகள் ஆக்கிரமிப்புகள் என கண்டறியப்பட்டு 287 சிறு கடை ஆக்கிரமிப்பாளர்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் காஞ்சிபுரம் மாவட்டம் சிங்கபெருமாள் கோயில் அருகில் புதியதாக உருவாக்கப்பட்ட ஆட்டோநகர் மனை பிரிவுகளில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 190 சிறு கடை ஆக்கிரமிப்பு கட்டடங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள ஆக்கிரமிப்பு கட்டடங்களை அகற்ற விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நேப்பியர் பாலம் முதல் மதுரவாயில் புறவழி சாலை வரை உள்ள கூவம் நதியின் கரையோரங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அப்பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை தடுக்கும் வகையில் ரூ.45.68 கோடி மதிப்பில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கவும், ரூ.39.87 கோடி மதிப்பில் 9 இடங்களில் பூங்காக்கள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது தெற்கு கூவம் சாலை, மேற்கு கூவம் சாலை கிழக்கு கூவம் சாலை, பூதபெருமாள் கோயில் தெரு, லிங்க் சாலை, முத்துமாரியம்மன் கோயில் தெரு, எம்.ஜி.ஆர் காலனி மற்றும் சிவானந்தம் சாலை ஆகிய இடங்களில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க. பாலம் முதல் மீனம்பாக்கம் வரை உள்ள அடையாற்றின் கரையோரங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அப்பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை தடுக்கும் வகையில் ரூ.51.69 கோடி மதிப்பில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கவும், ரூ.71.50 கோடி மதிப்பில் 11 இடங்களில் பூங்காக்கள் அமைக்கவும், ரூ.1.44 கோடி மதிப்பில் 3 இடங்களில் உள்ள பாலங்களை அழகுபடுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**